உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் **2025–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 7–ஆம் நாள்** வாதி / பிரதிவாதி/ மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய **வா.சா.2**–ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.ஸ்ரீலதா, கிரேடு 1 பெஞ்ச் கிளர்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| O.S. No | : 7 of 2020 |
| பெயர் | : முபாரக் அலி |
| தந்தை /கணவர் பெயர் | : |
| வயது | : |
| தொழில் | : |
| கிராமம் | : |
| தாலுக்கா | : |

---

தேதி : 7.4.2025.

P.W.2

**<u>வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை</u>:**

நான் லெப்பை சுன்னத் ஜமாஅத் மதரஸயே மன்ப உஸ் ஸாலிஹாத் பரிபாலன சபாவின் செயலாளராக உள்ளேன். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது. எனக்கு இவ்வழக்கின் வாதிகள் அபிபுல்லா மற்றும் பசீர் ஆகியோரை தெரியும், அவர்கள் தந்தை பெயர் அலாவுதீன் ஆகும். அந்த அலாவுதீனுக்கு 4 மகன்கள் மற்றும் 2 பெண்கள் வாரிசுகள் ஆகும். அலாவுதினின் வாரிசுகளான வாதிகள் அபிபுல்லா, பசீர் ஆகியோரை தவிர அவருடைய மற்ற வாரிசுகள் அப்துல்சத்தார்,

அனீபா, சபீயா, ஜமிளா ஆகும். நான் லெப்பை சுன்னத் ஜமாஅத் மதரஸயே மன்ப உஸ் ஸாலிஹாத் பரிபாலன சபாவின் செயலாளர் என்ற முறையில் Exhibit A6 கடிதத்தை கொடுத்துள்ளேன், அதில் 2வது பக்கத்தில் என் கையொப்பம் இருக்கிறது. வாதிகளின் தந்தை அலாவுதின் ஒருநாள் எங்கள் ஜமாத்திற்கு வந்து தனக்கு சொந்தமான காம்ப்ளக்ஸை அவருடைய மகள் சபியாகாதருக்கு தானமாக கொடுத்துவிட்டேன், மேலும் அதை திருப்பி எப்போது வேண்டுமானாலும் வாங்கிக்கொள்வேன் என்று சொன்னார். அந்த காம்ப்ளக்ஸ் அலாவுதினின் 4 மகன்களுக்குதான் சேரும் என்றும், ஏற்கனவே அசையாச்சொத்துக்களை சபியாகாதருக்கும், ஜமிளாவுக்கும் கொடுத்துவிட்டதாகவும் அலாவுதின் சொன்னார். பிறகு ஜமாத்தை அலாவுதின் அவருடைய வீட்டிற்கு கூப்பிட்டார், ஜமாத்தில் அன்று 2 பேர்தான் இருந்தோம், அலாவுதின் அவருக்கு உடம்பு சரியில்லை, இன்றைக்கே வாங்கள் என்று கூப்பிட்டார், நானும், சையது இப்ராஹிம் என்ற நிர்வாகியும் அலாவுதின் வீட்டிற்கு போனோம். அப்போது அலாவுதினின் 2 மகள்களும் அங்கு இருந்தார்கள், அதில் அலாவுதின் அவருடைய மகள் சபியாகாதரை கூப்பிட்டு இந்த காம்ப்ளக்ஸ் 4 பசங்களுக்குதான் சொந்தம், உங்களுக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டேன், காம்ப்ளக்ஸை திருப்பி கொடுத்துவிடு என்று எங்கள் முன்னால் கேட்டார், நானும் என்கூட வந்த சையது இம்ராஹிமும் காம்ப்ளக்ஸை கொடுத்துவிடுகிறீர்களா என்று சபியாகாதரிடம்

கேட்டோம், அதற்கு அவர் ஒப்படைத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டார். பிறகு அலாவுதின் எங்களிடம் தனக்கு உடம்பு சரியில்லை, ஏதாவது ஆகிவிடும் அதனால் இந்த காம்ப்ளக்ஸை அவருடைய 4 மகன்களுக்கு கொடுத்துவிடவேண்டும், மேலும் பேங்கில் இருக்கும் பணம் அனைத்தையும் இஸ்லாமிய சரியத்படி அவருடைய வாரிசுகள் 6 பேருக்கும் பிரித்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நாங்கள் வந்துவிட்டோம். அலாவுதின் லாரியெல்லாம் வைத்திருந்தார், நான் கடை வைத்திருந்தேன், அடிக்கடி அலாவுதின் என் கடைக்கு வருவார், 2000 ஆம் ஆண்டு நாங்கள் இருவரும் மக்கா போயிருந்தோம், அதன்மூலம் அலாவுதின் எனக்கு பழக்கம் ஆகும். 2002ஆம் ஆண்டுமுதல் நான் இந்த ஜமாத்தில் செயலாளராக இருக்கிறேன், அலாவுதினின் குடும்பத்தார்கள் அனைவரும் எங்கள் பள்ளியில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

<u>1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

நான் அந்த ஜமாத்தில் 23 ஆண்டுகளாக செயலாளராக இருக்கிறேன். இவ்வழக்கை பற்றிய முழு விவரங்கள் எனக்கு தெரியுமா என்று கேட்டால், 1ஆம் வாதி அபிபுல்லா சொன்னார். இவ்வழக்கில் எனக்கு சம்மன் வந்தபிறகுதான் அதை வாங்கிகொண்டு நான் 1ஆம் வாதி அபிபுல்லாவை பார்த்து வழக்கு விவரங்களை தெரிந்துகொண்டேனா என்று கேட்டால், இல்லை, அதற்கு முன்பே தெரிந்துகொண்டேன். இவ்வழக்கை பற்றி 1ஆம்

வாதி அபிபுல்லா எனக்கு சொல்லி ஒரு வருடம் இருக்கும். 1ஆம் வாதி அபிபுல்லா பேன்சி கடை வைத்துள்ளார். நான் தினமும் பள்ளிவாசல் போகும்போது 1ஆம் வாதி அபிபுல்லா கடைக்கு சென்று டீ சாப்பிட்டுவிட்டு அவரோடு பேசிவிட்டுதான் போவேன் என்று சொல்வது தவறாகும். 1ஆம் வாதி அபிபுல்லாவின் அப்பா அலாவுதின் எந்த தேதியில் பள்ளிவாசலுக்கு வந்து நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை சொன்னார் என்று கேட்டால், 2017ஆம் ஆண்டு அவர் இறப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பு வந்து சொன்னார், ஆனால் தேதி ஞாபகம் இல்லை. அலாவுதின் இறப்பதற்கு 6 முதல் 7 மாதங்கள்வரை உடம்புசரியில்லாமல் இருந்தார் என்றும், அதனால் அவர் இறப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பு பள்ளிவாசலுக்கு வந்து விவரங்களை என்னிடம் சொன்னார் என்று சொல்வது தவறு என்று சொன்னால், சரியில்லை, அலாவுதின் அவ்வப்போது உடம்பு சரியில்லாமல் இருப்பார், சரியாகிவிடுவார், அவர் இறப்பதற்கு 20 நாட்களுக்கு முன்புதான் பள்ளிவாசலுக்கு வந்து விவரங்களை என்னிடம் சொன்னார். Exhibit A6ல் அலாவுதின் என்றைக்கு பள்ளிவாசலுக்கு வந்தார் என்பதை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால், ஆமாம். நான் ஜமாத்தில் பொறுப்பான பதவியில் இருப்பதால், யாராவது ஜமாத்திற்கு வந்து இதுபோல் சொன்னால், நான் அவரிடம் கையொப்பம் பெற்று தேதியை குறிப்பிட்டுதான் இதுபோன்ற Exhibit A6 கடிதத்தை

கொடுப்பேன் என்றும், அதனால் வழக்கிற்காக வாதிகளுக்கு ஆதரவாக நானே Exhibit A6ஐ தயார் செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால், சரியில்லை. பள்ளிவாசலுக்கு அலாவுதினுடன் யார்யார் வந்தார் என்று கேட்டால், அவர் மட்டும்தான் வந்தார். அலாவுதின் பள்ளிவாசலுக்கு வந்தபோது பள்ளிவாசலில் பொறுப்பில் உள்ள யார்யார் இருந்தோம் என்று கேட்டால், நானும், சையத்இப்ராஹிமும் மட்டும்தான் இருந்தோம். அலாவுதின் எங்களிடம் எழுத்துபூர்வமாக ஒன்றும் கொடுக்கவில்லை.

எனக்கு ஆங்கிலம் கொஞ்சம் கொஞ்சம் படிக்க தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பிராதில் 9வது பத்தியில் வாதிகள், 1ஆம் பிரதிவாதி சபியாகாதர் பிராடு செய்துதான் Gift Deedஐ வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. பிராதில் வாதிகள் 1ஆம் பிரதிவாதி பிராடு செய்துதான் Gift Deedஐ வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொல்லியுள்ளார்கள், ஆனால் அலாவுதின் காம்ப்ளக்ஸை 1ஆம் பிரதிவாதியிடமிருந்து திருப்பி வாங்கியதாக Exhibit A6ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அப்படி உண்மையில் அலாவுதின் எங்களிடம் வந்து சொல்லியிருந்தால், 1ஆம் பிரதிவாதி சபியாகாதர் Gift Deedஐ பிராடு செய்து வாங்கியதாகதான் சொல்லியிருப்பார் என்றும், அதனால் அலாவுதின் எங்களிடம் வந்து எதுவும் சொல்லவில்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக Exhibit A6ஐ

தயார் செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். அலாவுதின் எங்களிடம் 1ஆம் பிரதிவாதிக்கு Gift Deedஐ கொடுத்ததாகவும், அதை 1ஆம் பிரதிவாதியிடம் இருந்து திருப்பி கேட்டதாகவும், எங்களிடம் சொன்னாரா என்று கேட்டால், அப்படி சொல்லவில்லை. அலாவுதின் மனப்பூர்வமாகதான் அவர் மகளான 1ஆம் பிரதிவாதி சபியாகாதருக்கு Gift Deedஐ எழுதி கொடுத்தார் என்றும், அதனால் அலாவுதின் 1ஆம் பிரதிவாதியிடம் அதை திருப்பி கேட்டிருந்தால், 1ஆம் பிரதிவாதி அச்சொத்தை அலாவுதினுக்கு திருப்பி கொடுத்திருப்பார் என்றும், அலாவுதின் 1ஆம் பிரதிவாதியிடம் சொத்தை திருப்பி கேட்கவில்லை என்றும், நாங்களாகவே வழக்கிற்காக Exhibit A6ஐ தயார் செய்து போட்டுள்ளோம் என்று சொன்னால், சரியில்லை, அலாவுதின் 2009ஆம் ஆண்டு சொத்தை 1ஆம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டதாகவும், அவருக்கு உடம்புசரியில்லை அதனால் வந்து எங்களை 1ஆம் பிரதிவாதியிடம் அச்சொத்தை திருப்பி கேட்க சொன்னதால், நாங்கள் கேட்டோம், 1ஆம் பிரதிவாதி திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டார், இதுதான் நடந்தது.

அலாவுதினை அவருக்கு உடம்புசரியில்லாத காலத்தில் 1ஆம் பிரதிவாதி சபியாகாதர்தான் பார்த்துக்கொண்டார் என்றும், மற்ற வாரிசுகள் அவரை பார்க்கவில்லை என்று சொன்னால், அலாவுதினை 1ஆம் பிரதிவாதி பார்த்துக்கொண்டது தெரியும், மற்ற

வாரிசுகள் அவரை பார்க்கவில்லையா என்பது எனக்கு தெரியாது. அலாவுதின் எங்கள் பள்ளிவாசலுக்கு வந்தபோது ஆவணங்கள் எதுவும் கொண்டுவரவில்லை, ஆனால் துண்டு சீட்டில் காம்ப்ளக்ஸின் பெயரையும், நம்பரையும் கொடுத்தார். அலாவுதின் உண்மையில் பள்ளிவாசலுக்கு வந்திருந்தால், அவரிடம் எழுதி வாங்கி, ஆவணங்களையும் பெற்று வைத்திருப்போம் என்று சொன்னால், ஆவணம் எதுவும் வாங்கவில்லை. 1ஆம் பிரதிவாதி சபியாகாதர் காம்ப்ளக்ஸை திருப்பி கொடுப்பதாக எங்களிடம் சொல்லியதை அவரிடம் எழுதி வாங்கினோமா என்று கேட்டால், எழுதி வாங்கிவில்லை, கேட்டேன், அவர் கொடுத்துவிடுவதாக சொன்னார். அலாவுதின் பள்ளிவாசலுக்கு வந்த அன்றே Exhibit A6ஐ எழுதினேனா என்று கேட்டால், இல்லை, அவர் பள்ளிவாசலுக்கு 2017ஆம் ஆண்டு வந்தார், நான் Exhibit A6ஐ 2018ஆம் ஆண்டு எழுதினேன். நான் வாதிகள் கேட்டதற்காக Exhibit A6ஐ எழுதினேனா என்று கேட்டால், 1ஆம் வாதி அபிபுல்லா நடந்த விசயத்தை கேட்டதால் Exhibit A6ஐ எழுதினேன். 1ஆம் பிரதிவாதி அலாவுதினை அவர் உடம்பு சரியில்லாமல் இருந்தபோது பார்த்துக்கொண்டதால், அலாவுதின் மனப்பூர்வமாகதான் Gift Deed ஐ 1ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தார் என்றும், அதனால் வாதிகளுக்காக நான் Exhibit A6ஐ தயார் செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால், சரியில்லை.

N.
MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.04.07 13:03:28 +0530